**தலைப்பு 221– தொழில் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 221 – தொழில் திணைக்களத்தின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 11 ஆம் திகதி தொழில் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 6550.58 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 4925.15 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1,625.43 மில்லியன் அல்லது 24.81 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,489.86 | 1,453.17 | 36.69 | 2.46 |
| மூலதனம் | 5,060.72 | 3,471.98 | 1,588.74 | 31.39 |
| மொத்தம் | **6550.58** | **4,925.15** | **1,625.43** | **24.81** |

**2.2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 22101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட வரம்புகளும் உள்ளவாறான பெறுமதிகளும் பின்வருமாறு.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 75.00 | 74.98 | 55.00 | 64.57 | 345.00 | 234.87 |

**2.3 கட்டு நிதிக் கணக்கு**

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0060/0016/000இலக்கக் கட்டு நிதிக் கணக்கின் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 20.19 மில்லியனாகும்.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

திணைக்களத்தின் கீழான 02 பொது வைப்புக் கணக்குகளில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 1,276.45 மில்லியனாகும். விபரம் வருமாறு.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0089/000 | 87.01 |
| 6000/0000/00/0013/0058/000 | 1189.44 |
| மொத்தம் | **1,276.45** |

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

தொழில் திணைக்களத்தின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேலே 1.1 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்குட்பட திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. இம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய கணக்காய்வு அவதானிப்புகளுள் போதியளவானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. போதியளவானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

2002 நவெம்பர் 28 ஆந் திகதிய ஐடீஐ/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் அணி தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு திணைக்களத்தால் பேணப்படவில்லை.

**3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**3.2.1 பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலவின விடயங்கள் 24 க்குக் கூடுதலாக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டமையால் ஏற்பாடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்பட்டதன் பின்னரான சேமிப்பு அச் செலவின விடயங்களுக்குரிய நிகர நிதியேற்பாட்டில் 6 முதல் 100 சதவீதம் வரையிலமைந்திருந்தது.

(ஆ) மூலதனச் செலவின விடயங்களுக்கான மொத்த நிதியேற்பாடு ரூபா 18 மில்லியனாகும். இது முற்றாகச் சேமிப்புக்குள்ளாகியிருந்தது.

**3.3 கட்டு நிதிக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 373(1) க்கமைய கட்டு நிதிக் கணக்கின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அன்றைய தினமே திறைசேரியின் அரச கணக்குத் திணைக்களத்தில் ஒப்படைக்கப்பட வேண்டுமாயினும், அவ்வாறல்லாது தீர்த்து வைக்கப்படாத முற்பண மீதி ஆகிய ரூபா 19,760,913 இலங்கை போக்குவரத்துச் சபையின் பணிக்கொடை நிலுவையை வழங்குவதற்காக நீர்கொழும்பு மற்றும் மாத்தறை மாவட்டத் தொழில் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் செயல் நிமித்தக் கட்டு நிதியைப் பெறும் உத்தியோகத்தர் பணி முடிவுற்றவுடனேயே கட்டு நிதியைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமாயினும், 70 சந்தர்ப்பங்களில் 01 முதல் 08 மாத கால தாமதத்தின் பின்னர் முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது.

**3.4 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப்பிரமாணம் 571 க்கமைய காலங் கடந்த வைப்புகளைத் தீர்த்து வைப்பதற்கு ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் காலங் கடந்த சகல வைப்புகள் தொடர்பான நிரலைத் தயாரிக்க வேண்டுமாயினும், அவ்வாறு அது தயாரிக்கப்படவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 570(இ) மற்றும் 571(2)(3) என்பவற்றின் பிரகாரம் காலங் கடந்த வைப்புகள் அரச வருவாயிலிடப்பட்டதன் பின்னர் அவற்றை மீண்டும் பெறுவதற்கான கோரிக்கையை இயலுமானளவு தவிர்த்துக் கொள்ளும் அடிப்படையில் அவ் வைப்புக்களை அரச வருவாயிலிடுவதற்கு முன்னரே விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதையடுத்து அவற்றை அரச வருவாயிலிட வேண்டுமாயினும், கணக்காய்வில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுச் செவ்வையின் பிரகாரம் ரூபா 743,177 வைப்புகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மாவட்டத் தொழில் அலுவலகங்களில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் அல்லாத கேள்வி வைப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டமையும் மூன்றாம் நபர்களுக்கு மீண்டும் வழங்கப்படுவதற்காகவிருந்த தற்காலிகமாக நிறுத்தி வைத்த தொகையான ரூபா 64.64 மில்லியன் காணப்பட்டதுடன், நிதிப்பிரமாணம் 570(இ) மற்றும் 571(2)(3) என்பவற்றின் பிரகாரம் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதியத்திற்கென அறவிட வேண்டிய தொகை மற்றும் சேவை வழங்குநருக்குரிய ஏனைய படிகளும் முறைப்படி வழங்கப்படுவதானது சேவை

பெறுவோரால் புறக்கணிக்கப்படுமிடத்து இணக்கப்பாட்டின் அடிப்படையில் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகளின் மூலம் குறித்த தொகை மற்றும் தண்டப் பணம் என்பவற்றை அறவிடும் அதிகாரம் தொழில் ஆணையாளருக்கு உள்ளது. அதற்கமைய, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அறவிடப்பட்ட தொகை தவணை ரீதியில் பெறப்பட்டவுடனேயே ஊழியர்களது கணக்கில் செலவு வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும், 05 ஆண்டுகளுக்கு மேலாக வழங்கப்படாதிருந்த ரூபா 15,838,924 பொது வைப்பாகத் தேங்கியிருந்தது.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 22101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 5,563,387 ஆகும். அந் நிலுவை மீதிகள் 01 முதல் 37 ஆண்டுகள் வரையிலானவை. அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான தொடர் நடவடிக்கைகள் மிகவும் நலிவுற்ற நிலையில் இருந்தன.

(ஆ) கடன் நிலுவை மீதி

(i) திணைக்களம் வழங்கிய கடன் நிலுவை தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாதிருந்த 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதிகள் ரூபா 1,061,097 ஆகும். 1 முதல் 2 ஆண்டுகள் வரையிலான பழைய கடன் மீதிகள் ரூபா 1,659,389 ஆகும். 2 முதல் 3 வரையிலான பழைய கடன் மீதிகள் ரூபா 713,786 ஆகும்.

(ii) வேலை இடமாற்றம் பெற்ற, ஓய்வுபெற்ற, மரணமடைந்த, வேலை இடை நிறுத்தத்திற்குள்ளான, சேவை நீங்கிய, வேலை முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட 45 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவை மீதியான ரூபா 2,062,519 தீர்த்து வைக்கப்படுவதற்கு உசிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

(iii) 2004 ஒக்டோபார் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு, செலவுத் திட்டத் திணைக்களச் சுற்றறிக்கையின் 3.2.2, 3.2.3 ஆம் பந்திகளின் பிரகாரம், 15 ஆண்டுகளாக மாகாண சபைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 50,777 கடன் மீதியை ஒரே தடவையிலோ அல்லது மாதாந்தமோ அறவிடுவதற்கான விசேட கவனம் செலுத்தப்படவில்லை.

(iv) தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.2.5 இல் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஓய்வு பெற்ற மற்றும் மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து தீர்த்து வைக்கப்படாதுள்ள கடன் மீதிகளை அவர்களது குறைக்கப்பட்ட ஓய்வூதியம் அல்லது பணிக்கொடையிலிருந்து அறவிட வேண்டும். எவ்வாறாயினும், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறு அறவிடப்படாதிருந்த உத்தியோகத்தர்களது கடன் நிலுவை மீதி ரூபா 540,558 ஆகும். அதற்கிடையே, 5 ஆண்டுகளுக்கு மேற்பட அறவிடப்படாதிருந்த கடன் நிலுவை மீதி ரூபா 180,972 ஆகும்.

### 3.6 சொத்து முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டவாறான சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருப்பது கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்து வகை | கூறுகளது எண்ணிக்கை | பெறுமதி | பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்த காலம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ஆண்டுகள் |
| (i) | மடிக் கணனி | 314 | 30,164,096 | 03 |
| (ii) | அச்சிடல் இயந்திரப் பாகங்கள் குளு பயின்டர் (GLUE BINDER) | 1 | 5,388,690 | 09 |

(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்களை முறையற்றவாறு உபயோகப்படுத்தல்

நிர்மாணிக்கப்பட்ட 02 தொழில் அலுவலகங்களுக்கான செலவினம் ரூபா 202.20 மில்லியனாகும். இக் காணியின் சட்டபூர்வ உரித்தைப் பெறுவதற்குத் தொழில் திணைக்களம் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.7 உள்ளுர் நிதியளிப்பு மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குதல்

செயற்திட்டத் தாமதம் மற்றும் அங்கீகாரம் இல்லாது நிர்மாண வேலைகளை மேற்கொள்ளுதல் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வருவன புலனாகின.

(அ) அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகள்

இரண்டு பிரதேச தொழில் அலுவலகங்கள் ரூபா 187.51 மில்லியனில் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாகக் குறித்த உள்ளுராட்சி நிறவனத்தின் மூலம் கட்டிடத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்ட அமுலாக்கலில் தாமதம்

திணைக்களம் பின்வரும் நிர்மாண வேலைகளுக்கான செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் அசாதாரண தாமதம் நிலவியமை அவதானிக்கப்பட்டது.

| செயற்திட்டம் | ஒப்பந்தப் பெறுமதி | ஆரம்பத் திகதி | முடிவடைய வேண்டிய திகதி | முடிவடைந்த திகதி | 2016/12/31 இல் உள்ளவாறான வேலை முடிவின் சதவீதம் | கால தாமதம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | | | | | |
| யாழ்ப்பாண மாவட்டத் தொழில் அலுவலகம் கட்டம் C | 15,498,500 | 2015/07/13 | 2016/01/11 | 2016/12/30 | - | 01 வருடம் |
| அவிசாவளை மாவட்டத் தொழில் அலுவலகம் கட்டம் I | 24,800,000 | 2014/01/07 | 2104/08/05 | - | 45 | வருடம் 02 மாதம் 05 |

(இ) செயற்திட்ட முகாமைத்துவ வினைத் திறமையின்மை

தொழில் திணைக்கள முகாமைத்துவ நிர்மாணத் துறை அறிவுடைய பொறியியலாளரை உள்ளடக்கிய பிரிவு ஒன்றைத் திணைக்களத்தில் நிறுவியிராததுடன், திணைக்கள நிர்மாண வேலைகளை நேரடியாகவே கட்டிடத் திணைக்களத்திடம் ஒப்படைத்திருந்தது. இவ்வாறு திணைக்களமே போட்டியுடனான கூறுவிலைகளைக் கோராது விட்டமையால் 11 சந்தர்ப்பங்களில் ஒப்பந்தகாரர்களது பெறுமதிக்கு அதிகமாக ரூபா 156.2 மில்லியன் கூட்டுத் தொகையைத் திணைக்களம் கட்டிடத் திணைக்களத்திற்குக் கொடுப்பனவு செய்திருந்தது.

### 3.8 செயலாற்றல்

2016 வருடாந்த வரவு, செலவுத் திட்ட மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயலாற்றலது முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் வருமாறு.

(அ) போதுமான அளவு நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

போதுமான அளவு நிறைவேற்றப்படாத சில பிரதான பணிகள் வருமாறு.

(i) தொழில் நியமப் பிரிவு

- சம்பளக் கட்டுப்பாட்டு மன்ற கட்டளைச் சட்டம், சாப்பு மற்றும் அலுவலக ஊழியர் அதிகாரச் சட்டம் மற்றும் 2005 வரவு, செலவுத் திட்ட சலுகைப் படி அதிகாரச் சட்டம் என்பன முறையாக அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதை ஆராய்ந்து தொழில் நியமப் பிரிவுக்கு அறிக்கை வழங்குதல் தொழில் உத்தியோகத்தர்களது கடமைகளில் ஒன்றாகும். எனினும், கணக்காய்வுக்குள்ளான 10 பிரதேச தொழில் அலுவலகங்களில் தொழில் உத்தியோகத்தர்கள் குறிப்பிடத்தக்க சந்தர்ப்பங்களின்போது அவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இருந்தமை அவதானிக்கப்பட்டது.

- வரவு, செலவுத் திட்டச் சலுகைப் படி கிடைக்கப் பெறாமை மற்றும் ஏனைய பல்வேறு சம்பளக் கொடுப்பனவு தொடர்பான ஊழியர்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் பொறுப்பு முறைப்பாட்டுக்குள்ளாகும் நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச தொழில் அலுவலகத்திடம்

ஒப்படைக்கப்பட்டிருந்தபோதும், அவ்வாறாக அனுப்பி வைக்கப்பட்ட 26 முறைப்பாடுகள் சம்பந்தமாக பரிசீலனை மேற்கொள்ளப்பட்டுக் குறித்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) வேலையை முடிவுக்குக் கொண்டு வரும் பிரிவு

---

சேவை நாடுநர்கள் தன்னிச்சையாக சட்டபூர்வமற்ற விதத்தில் தொழிலாளரைக் குறைத்தல், தற்காலிகமாக அகற்றுதல், வெளியேற்றுதல் என்பவற்றைத் தவிர்ப்பதற்கும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் வேலை நாடுநர், சேவை வழங்குபவர் ஆகிய இரு சாராருக்கும் ஏற்படும் இடர்களை மத்தியஸ்தமாக ஆராய்ந்து சட்டபூர்வமாக அவற்றிற்குச் சலுகை வழங்கும் நோக்குடனான வேலையை முடிவுக்குக் கொண்டு வரும் பிரிவுக்கு மீளாய்வாண்டின் முடிவளவில் 210 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அவற்றுள் 88 மீளாய்வாண்டு இறுதியிலேனும் தீர்த்து வைக்கப்படாதிருந்தன. அந்த எண்ணிக்கை மொத்த முறைப்பாடுகளின் 42 சதவீதமாகும்.

(iii) கைத்தொழில் ஒருங்கிணைப்புப் பிரிவு

---

பொருளாதார உற்பத்தி மற்றும் அபிவிருத்தியைப் போன்றே தொழில் பெறுபேறுகளையும் உயர் நிலைக்குக் கொண்டுவருவதற்கு, சேவை நாடுநரினதும் சேவை வழங்குபவரதும் உரிமைகளைப் பாதுகாத்தவாறு நாட்டில் பொருளாதார மற்றும் கைத்தொழில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்குடனான இப்பிரிவுக்குக் கைத்தொழில் பிணக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியளவில் 462 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று அதில் 300 மீளாய்வாண்டு இறுதியளவிலும் தீர்த்து வைக்கப்படதிருந்தன. அது மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் 65 சதவீதமாகும்.

(iv) தொழில் ரீதியான பாதுகாப்புப் பிரிவு

---

2016 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கமைய பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுகையில் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாதுபோன சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| நிகழ்ச்சித் திட்ட நடவடிக்கைகள் | இலக்கு | முன்னேற்றம் | இலக்கினை அடையாத சதவீதம் |
|---|---|---|---|
| • தொழிற்சாலை விபத்துக்களைப் பரிசிலீத்தல் | 6,400 | 4,975 | 22 |
| • ஊழியர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | 240 | 177 | 26 |
| • சுற்றாடல் அளவையை மேற்கொள்ளுதல் | 100 | 46 | 54 |

(v) திட்டமிடல் ஆராய்ச்சிப் பயிற்சி மற்றும் பிரசுரப் பிரிவு

---

2016 ஆம் ஆண்டின்போது இப்பிரிவில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட 11 கணனிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படவில்லை. அது 80 சதவீதமாகும். மேலும், ''தொழில் பரிசீலனைப் புகார்கள் மற்றும் வழக்கு நடவடிக்கைகளைக் கணனிமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் (LISA) அமுலாக்கலின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேறவில்லை. திணைக்கள உத்தியோகத்தர்களின் கணனி அறிவுக் குறைவு இதற்கான பிரதான தடையாக இனங்காணப்பட்டிருந்தது. எனினும், இப்பிரிவினால் திட்டமிடப்பட்ட 11 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் நடாத்தப்படாததால் நிலைமை தீவிரமாகியிருந்தது.

(vi) தொழில் அலுவலகங்களின் செயலாற்றல்

---

- 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சகல தொழில் அலுவலகங்களது ரூபா 1,803,514,552 பெறுமதியின் பொருட்டுச் செயலற்றவாறு இருக்கும் 3,680 வழக்குகள் மற்றும் ரூபா 812,197,854 க்கான திறந்த பிடி ஆணைகள் 2,461 என்பன நிலவின் குற்றஞ் சாட்டப்பட்டவர்களது வதிவிட முகவரி மாற்றம், வெளிநாடு செல்லல், வழங்கப்பட்டிருந்த முகவரிகள் சரியாக இருக்காமை போன்ற காரணங்களால் இவ்வழக்குகள் தீர்த்து வைக்கப்படாதிருந்தன. அவற்றை சுழற்சிக்குட்படுத்தவோ அல்லது வேறு வழக்குகளின் மூலம் தீர்த்து வைப்பதற்கோ தொழில் உத்தியோகத்தர்களை நேரடியான பங்களிப்பில் ஈடுபடுத்துவதற்குப் போதுமான ஏற்பாடுகளை மேற்கொள்ள முகாமைத்துவம் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியிருந்தது.

- 2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் தொடர்பாகத் தொழில் அலுவலகங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 52 தொழில் அலுவலகங்களுக்குள் முல்லைத்தீவு அலுவலகத்தைத் தவிர ஏனைய அலுவலகங்களில் 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்த புகார்க் கடிதங்களும் முறைப்பாடுகளும் 11,265 ஆகும்.

- 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 19 தொழில் அலுவகங்களில் வழங்கப்படாதிருந்த முதல் அறிவிப்புகளின் எண்ணிக்கை 1,674 ஆகும். 21 தொழில் அலுவலகங்களில் வழங்கப்படாதிருந்த இறுதி அறிவிப்புகளின் எண்ணிக்கை 1,476 ஆகும்.

(vii) தொழில் உத்தியோகத்தர்களது செயலாற்றல்

---

- 2007 ஒக்டோபர் 31 ஆந் திகதிய 15/2007 ஆம் இலக்கத் தொழில் திணைக்களச் சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் தொழில் உத்தியோகத்தர்கள் மாதாந்தம் குறைந்தளவு 20 பருவப் பரிசீலனைகளையேனும் மேற்கொள்ள வேண்டும். எவ்வாறாயினும், 49 தொழில் அலுவலகங்களில் அவ்வாறு மேற்கொள்ளப்படாது போன களப்பரிசோதனைகளின் எண்ணிக்கை 17,113 ஆகும்.

- 2000 பெப்ரவரி 10 ஆந் திகதிய 6/2000 ஆம் இலக்கத் தொழில் திணைக்களச் சுற்றறிக்கையின் 1(iv) ஆம் பந்தியின் பிரகாரம் நெடுஞ்காலமாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாதிருக்கும் நிறுவனங்களைப் பரிசோதனையிட உதவித் தொழில் ஆணையாளர் ஒருவர் தெரிவுகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கமைய, 20 களப் பரிசோதனைகளில் 10 உதவித் தொழில் ஆணையாளரது தற்றுணிப்பக்கமைய இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், 26 தொழில் அலுவலகங்கள் அவ்வாறாக மேற்கொள்ளாதுபோன பரிசோதனைகளின் எண்ணிக்கை 14,022 ஆகும்.

- 2007 ஒக்டோபர் 31 ஆந் திகதிய 15/2007 ஆம் இலக்கத் தொழில் திணைக்களச் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் குறித்த மாதத்தினது நாட்பதிவுப் புத்தகம் அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் உதவித் தொழில் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 44 தொழில் அலுவலகங்களால் தாமதமாகச் சமர்ப்பிக்கப்பட்ட நாட் பதிவுப் புத்தகங்களது எண்ணிக்கை 1,648 ஆகும். சிரேஷ்ட உத்தியோகத்தர்களது மேற்பார்வை நலிவடைந்தமையாக இது அவதானிக்கப்பட்டது.

- 2007 ஒக்டோபர் 31 ஆந் திகதிய 15/2007 ஆம் இலக்கத் தொழில் திணைக்களச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் சகல பரிசோதனைகளது அறிக்கைகளும் தாமதமின்றி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். எனினும், 16 தொழில் அலுவலகங்கள் அவ்வாறாகச் சமர்ப்பிக்காதிருந்த பரிசோதனை அறிக்கைகளது எண்ணிக்கை 2,471 ஆகும்.

(viii) தொழில் பரிசோதனை முறைப்பாடுகளும் வழக்கு நடவடிக்கைகளைக் கணனிமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தினது செயலாற்றலும் (LISA)

---

- 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தொழில் அலுவலகங்களது வழக்குகள், முறைப்பாட்டுக் கடிதங்கள், முறைப்பாடுகள், பரிசோதனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுதல், அரை மாதச் சுற்றுலா நிகழ்ச்சித்திட்டங்களைச் சமர்ப்பித்தல் சம்பந்தமான தகவல்களுக்கும் LISA முறைமையில் உள்ளடக்கப்பட்டிருந்த தகவல்களுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்பட்டன. ஆகவே, LISA முறைமையின் மூலம் வழங்கப்படும் தகவல்களின் பிழையற்ற தன்மை நிச்சயமற்றதாகவிருந்தது.

- தொழில் உத்தியோகத்தர்கள் இம் மடிக் கணனியின் தொழில்சார் செயற்பாடு சம்பந்தமான காரணத்தை விளக்கியும் 2017 யூலை 25 ஆந் திகதியளவிலும் நிறுவனத்தினது நடவடிக்கைகளுக்கு அது பயன்படுத்தப்படாதிருந்தது. அச் சொத்துக்களை மீளச் சுவீகரித்து அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகளின் மூலமேனும் LISA நிகழ்ச்சித்திட்டத்தினது நோக்கத்தை நிறைவேற்றுவதற்கும் ஆக்கபூர்வமாக அதனைப் பயன்படுத்துவதற்கும் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

- 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு LISA நிகழ்ச்சித் திட்டத்திற்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்திருந்தபோதும் மடிக் கணனிகள் வழங்கப்படாதிருந்த உத்தியோகத்தர்களது எண்ணிக்கை 114 ஆகும். இது மொத்த உத்தியோகத்தர்களது எண்ணிக்கையில் 22 சதவீதமாகும். அவ்வாறே, மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்நிலைமை 92 சதவீதமாக உருமாறியிருந்ததுடன், முறைமையைச் செயற்படுத்துகையில் முறையாகத் திட்டமிடலை மேற்கொள்ளாத முகாமைத்துவம் மற்றும் முறைமையில் நிலவும் வினைத்திறமையின்மை என்பன காரணமாக நிலைமை தீவிரமடைந்திருந்தது.

**3.9 இழப்புகளும் நட்டங்களும்**

---

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது புலனாகிய இழப்புகள் மற்றும் நட்டங்கள் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

இலங்கை சுங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டுப் பின்னர் திணைக்களத்தால் பயன்படுத்தப்பட்டிருந்த வேன் ஒன்று கடத்திச் செல்லப்பட்டிருந்தது. எனினும், வாகனத்தின் இழப்பும் ஏற்பட்ட நட்டத்தினது பெறுமதியும் தொடர்பான அதி கூடிய பெறுமதியை நிதிப்பிரமாணம் 105(1) க்கமைய இனங்கண்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 104(2) க்கமைய அது தொடர்பான அறிக்கையும் திறைசேரிக்கு வழங்கப்படவில்லை. அவ்வாறே, நிதிப்பிரமாணத்தின் 104(3) க்கமைய இழப்பு தொடர்பான ஆரம்ப அறிக்கை மற்றும் 104(4) இன் பிரகாரமான பூரண அறிக்கை என்பன 10 ஆண்டுகால தாமதத்தின் பின்னர் 2012 ஏப்ரல் 03 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**3.10 முகாமைத்துவ நலிவுகள்**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பன்னிரண்டு தொழில் அலுவலகங்களை ரூபா 710.94 செலவில் நிர்மாணித்தமை தொடர்பாக நிர்மாண வேலை உள்ளவாறு நிறைவேற்றப்பட்ட காலப்பகுதி மற்றும் வேலை முடிவடைந்ததைத் தெரிவிக்கும் சான்றிதழ் (Completion Certificate) என்பவற்றை உள்ளடக்கிய முறையான தரவுக் களஞ்சியத்தைத் திணைக்களம் பேணுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

(ஆ) களுத்துறை தொழில் அலுவலகத்துக்குரிய பயாகல, பேருவளை, தெபுவன பிரதேசங்களில் உள்ள 1,100 நிறுவனங்கள் சம்பந்தமாக அவற்றின் பணிகளில் ஈடுபட்டிருந்த தொழில் உத்தியோகத்தர்கள் ஏறக்குறைய 1 ½ ஆண்டுகளாக முறையாகப் பரிசீலனைகளை மேற்கொண்டிருக்கவில்லை. இவ்வாறாக பெருமளவு நிறுவனங்கள் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாததால் அந்நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தொழில் திணைக்களத்தினூடாக நிறைவேற்றப்பட வேண்டிய முறையான வேலைகள் / பாதுகாப்பு என்பது இல்லாது போனதுடன் அது தொடர்பாகப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவுமே மேற்கொள்ளப்படவுமில்லை.

**3.11 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியும்**

2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 210 | 161 | 50 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 668 | 363 | 305 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,771 | 1,434 | 337 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 489 | 442 | 49 | 02 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 02 | - | 02 |
| | மொத்தம் | 3,138 | 2,402 | 741 | 05 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் சிரேஷ்ட மட்டத்திலும் மூன்றாம் நிலை மட்டத்திலும் நிலிய 355 வெற்றிடங்கள் உள்ளடங்கலான 738 வெற்றிடங்களை நிரப்புவதற்குத் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லை.

(ஆ) தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியினது IV ஆம் அத்தியாயத்தினது 3.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு முதல் சமயாசமய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட சுருக்கெழுத்தாளர் பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.